

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.10.2024) தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டின் EATON நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் கிரெய்க் ஆர்னால்ட் (Thiru. Craig Arnold) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே.விஷ்ணு, EATON நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மற்றும் முதன்மை நிதி அலுவலர் ஒலிவியர் லியோநெட்டி (Thiru. Olivier Leonetti), செயல் துணைத் தலைவர் மற்றும் தலைமை தொழில்நுட்பவியல் அலுவலர் ராஜ ரமண மச்சா, Global Energy Infrastructure Solutions, Electrical Sector தலைவர் மேத்யு ஹாக்மேன் (Thiru. Matthew Hockman), Eaton நிறுவனத்தின் புனே பிரிவு நிர்வாக இயக்குநர் மெரைன்டிரைவ் பிஸ்கலதனபாலன் (Thiru. Marinedrive Piskaladhanabalan), EMEA Global Energy துணைத் தலைவர் மற்றும் பொது மேலாளர் சைமன் மேத்திசன் (Thiru. Simon Matthieson), Global Energy Infrastructure Solutions (GEIS) நிறுவனத்தின் இந்திய நாட்டிற்கான இயக்குநர் பிலிபோஸ் ஜேக்கப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.10.2024) தலைமைச் செயலகத்தில், வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக உதவி வேளாண்மை அலுவலர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 83 நபர்களுக்கும், வேளாண்மை துறையில் பணிபுரிந்து பணிக்காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்கள் 42 நபர்களுக்கு கருணை அடிப்படையிலும் பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை இயக்குநர் / முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் குமாரவேல்பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ரூ.38,698 கோடி மதிப்பில் 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல்!

# 46,931 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள்!

### அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, அக்.11-**

**நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டம் தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “46,931 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும் 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை”ப் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

**இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில், மின்னணுப் பொருட்கள், பாது காப்பு, மருத்துவம், தோல் அல்லாத காலணிகள், புதுப்பிக்கத் தக்க ஆற்றல், மின் வாகனங்கள், தொலைத் தொடர்பு எனப் பல்வேறு துறைகளில் பரவலாக 12 மாவட்டங்களில், 46,931 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கக்கூடிய ரூ.38,698.8 கோடி மதிப்பிலான 14 முதலீட்டுத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப் பட்டுள்ளது.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.



மாநகராட்சி, அடையாறு மண்டலம், வேளச்சேரி, ராஜலட்சுமி திருமண மண்டபத்தில், நேற்று முன்தினம் (09.10.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமையில், அடையாறு மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வடகிழக்குப் பருவமழை முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக, அலுவலர்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கங்கள், தன்னார்வலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா எம்.எல்.ஏ., துணைமேயர் மு.மகேஷ்குமார், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் ஆர்.துரைராஜ், மண்டல அலுவலர் பி.வி.சீனிவாசன், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மற்றும் சேவைத்துறைகளின் அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள், தன்னார்வலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## என் உயிரினும் மேலான..!

### கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலுடன் தி.மு.க. இளைஞர் அணி மாவட்ட அளவில் நடத்திய **‘என் உயிரினும் மேலான..!’** பேச்சுப் போட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். அந்தப் போட்டிகளில் 913 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில், அடுத்த கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெறவுள்ளன.

**13-10-2024, ஞாயிற்றுக்கிழமை**

| வ. எண் | வருவாய் மாவட்டம் | போட்டி நடைபெறும் இடம் | நடுவர்கள் | ஒருங்கிணைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | சென்னை, செங்கல்பட்டு | அன்பகம், தி.மு.க. இளைஞர் அணி அலுவலகம். 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-18. | வழக்கறிஞர் அருள்மொழி, எஸ்.கே.பி.கருணா, இந்திரகுமார் தேரடி | எஸ்.ஜோயல் |
| 2 | விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, புதுச்சேரி | டி.கே.பி. திருமண மண்டபம், திண்டிவனம்-மரக்காணம் சாலை, திண்டிவனம், விழுப்புரம்-1. | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், மருத்துவர் ஷஃபி சுலைமான், தமிழ் காமராசன் | ப.அப்துல் மாலிக் |
| 3 | காஞ்சிபுரம், திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவண்ணாமலை | கே.பி.ஜெ.மஹால், திமிரி, மருதம்பாடி, இராணிப்பேட்டை-21. | முனைவர் சபாபதி மோகன், வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, மருத்துவர் ஹபீஸ் | க.பிரபு |
| 4 | நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர் | சப்தகிரி பொறியியல் கல்லூரி, சேலம்-பெங்களூரு நெடுஞ்சாலை, பெரியன்னஹள்ளி, தருமபுரி-5. | மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., வழக்கறிஞர் ராஜீவ்காந்தி, டான் அசோக் | பி.எஸ்.சீனிவாசன் |
| 5 | கரூர், திருப்பூர், கோவை, ஈரோடு, நீலகிரி | தளபதி அரங்கம், கலைஞர் அறிவாலயம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக அலுவலகம், திருப்பூர்-4. | கோவி.லெனின், வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அமுதரசன் | கே.இ.பிரகாஷ், எம்.பி. |
| 6 | திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவாரூர், தஞ்சாவூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்கால் | பிலோமினா ஷாப்பிங் மால், வினோதகன் மருத்துவமனை எதிரில், அருளானந்தா நகர், மேற்கு விரிவாக்கம், தஞ்சாவூர்-7 | திண்டுக்கல் லியோனி, மருத்துவர் யாழினி, பொள்ளாச்சி சித்திக் | நா.இளையராஜா, சி.ஆனந்தகுமார் |
| 7 | மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் | பி.ஆர்.மஹால், ஆலாத்தூர், ஊமச்சிக்குளம்-கடச்சனேந்தல் சாலை, மதுரை. | நாஞ்சில் சம்பத், எம்.எம்.அப்துல்லா எம்.பி., வே.மதிமாறன் | ஜி.பி.ராஜா |
| 8 | இராமநாதபுரம், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, | சுப்புலட்சுமி திருமண மண்டபம், பேருந்து நிலையம் அருகில், நாங்குநேரி, திருநெல்வேலி. | பொன்.முத்துராமலிங்கம், செந்தில்வேல், சூர்யா கிருஷ்ணமூர்த்தி | இன்பா ஏ.என்.ரகு |

**பேச்சுப் போட்டிக்கான விதிமுறைகள் :**

● மண்டல அளவிலான பேச்சுப்போட்டிகள் காலை 9 மணிக்கே தொடங்கும். எனவே முதல் நாளே நடுவர்களும் பங்கேற்பாளர்களும் போட்டி நடைபெறும் பகுதிக்கு வந்துவிடவேண்டும். ● பங்கேற்பாளர்கள் தங்களுடன் ஒருவரை அழைத்து வரலாம். அவர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ● போட்டி நடைபெறும் அன்று, காலை மற்றும் மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ● பங்கேற்பாளர்கள் கீழ்க்கண்ட ஐந்து தலைப்புகளில் மூன்று தலைப்புகளைத் தங்கள் விருப்பத் தலைப்பாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

● **என்றென்றும் பெரியார்-ஏன்?** ● **அண்ணாவும் மாநில சுயாட்சியும்** ● **கலைஞர் - நவீன தமிழ்நாட்டின் சிற்பி** ● **திராவிட மாடல் நாயகர் மு.க.ஸ்டாலின்** ● **தமிழ்நாட்டுக் குடும்பங்களில் தி.மு.க**

மூன்று விருப்பத் தலைப்புகளில் நடுவர்கள் தரும் ஒரு தலைப்பில் போட்டியாளர்கள் பேச வேண்டும்.

● பேசுவதற்கான நேரம் ஐந்து நிமிடங்கள். மூன்று நிமிடங்களில் முதல் எச்சரிக்கை மணி ஒலிக்கும். இரண்டாம் எச்சரிக்கை மணி ஒலித்ததும் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**போட்டியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் அன்பும் வாழ்த்தும்.**

அன்பகம், சென்னை – 18.
நாள் : 08–10–2024.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி